New Science Academy
Kannathiddy Jaffna
BOTANY 90 A/L
தரைத்தாவரக் கூர்ப்பு
வாரநாள் வகுப்புக்கள்
3 வாரத்தில் முடிக்கப்படும்.
ஆரம்பம்: 01 - 06 - 90
தினசரி 10-30—12-30
By: Mr. V. S. குணசீலன்

பக்கங்கள் எட்டு விலை ரூபா:- 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 109 வெள்ளி 25-05-1990 (வைகாசி 11) ஷவ்வால் 29

90 A/L AUG.
BOTANY
சூழலியல்
ஆரம்பம்: 01 - 06 - 90
(3 வாரத்தில் முடிக்கப்படும்)
வாரநாட்களில்
8-45—10-30 A. M.
By: Mr. V, S. குணசீலன்
New Science Academy
B.M C. முன்பாக
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

## ஒரு வாரத்தில் மாகாண சபை செயலிழப்பு இரு வாரத்தில் அரசு அடுத்த நடவடிக்கை

இன்னும் ஒரு வாரத்தில் வடக்குக் கிழக்கு மாகாணசபை செயலிழக்கவுள்ளது. இன்னும் இரு வாரத்தினுள் இச்சபையைக் கலைப்பது தொடர்பாக முடிவுவெடுக்கப்படவுள்ளது

அடுத்த வெள்ளிக்கிழமைக்குள் மாகாண சபைக்கூட்டம் நடைபெறாவிடின் அது தானாகவே செயலிழக்கும்.

இதைத்தொடர்ந்து இருவாரத்தினுள் மாகாணசபைபற்றி அடுத்த கட்டநடவடிக்கை குறித்து ஜனாதிபதி முடிவெடுப்பார் எனவும் இதற்குரிய சட்ட ஆலோசனைகள் நடைபெறுவதாகும் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

இதேவேளை இன்னும் ஒரு வாரத்தினுள் மாகாணசபைக் கூட்டம் கூட்டுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என ஈ.பி.ஆர்.எல்.எப் வட்டாரங்கள் தெரிவித்தன.

# புலிகளுடன் மட்டுமல்ல மற்றைய இயக்கங்களுடனும் அரசு பேசும்

## புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர் மீது அமைச்சர் ரஞ்சன் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்ல ஏனைய தமிழ் குழுக்களுடனும் அரசு பேச்சுக்களை நடாத்த விரும்புகிறது என்று பாதுகாப்பு இணையமச்சர் ரஞ்சன் விஜேரட்ன நேற்றுத் தெரிவித்தார்.

வட-கிழக்கில் ஏழு தமிழ்க் குழுக்கள் இருக்கின்றன அவை அனைத்துடனும் அரசு பேச்சு நடத்தவுள்ளது பேச்சுக்கள் மூலமே அரசு தீர்வுகாண விரும்புகிறது இதன் மூலமே மோதலை தீர்க்க முடியும் அரசாங்கம் என்ற முறையில் சகலருடனும் பேச்சு நடத்த வேண்டும் என்பது தவிர்க்க முடியாதது எனவும் அமைச்சர் சொன்னார்.

புலிகளின் கீழ்மட்டத்தில் உள்ளவர்களின் நடவடிக்கைகள் மோசமாக இருக்கின்றது என குறிப்பிட்ட ரஞ்சன் புலிகள் தொடர்பாக வெளிவந்

— 08 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி கிழக்குப் பகுதியில் 1988ல் நிதி ஒதுக்கப்பட்டும் இன்னமும் மின்சாரம் இல்லை

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு 1988ம்,1989ம் ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டும் இன்னமும் மின்சாரம் வழங்கப் படவில்லை.

புதுக்காடு சந்தியில் இருந்து தாளையடிவரை மின்சாரம் வழங்கப்படுவதற்கு ஆரம்ப

—08 ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோரை இழந்த மாணவர் உதவி வழங்கத் திட்டம்

பெற்றோர்களை இழந்து பாதுகாவலரின் பொறுப்பில் பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் திட்டம் ஒன்று கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப் படுத்

— 08 ஆம் பக்கம் பார்க்க

## தனது 3 பிள்ளைகளுக்கு நேற்று அந்தியேட்டி நடாத்திய தந்தை

நேற்றைய தினம் வே. ஆதி. அருணாசலம் என்பவர் தனது மூன்று மைந்தர்களுக்கான அந்தியேட்டிக் கிரியைகளை செய்துள்ளார்,

இப்பரிதாபச் சம்பவம் வல்வையில் இடம்பெற்றுள்ளது. இவரது மூன்று மைந்தர்களும் சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம்2ம் திகதி இந்தியராணுவத்தினரால் ஒரே முறையில் படுகொலை செய்யப்பட்டவர்களாவர். (22)

## மத்திய அரசின் சிபார்சுகள் மாகாண அரசில் செல்லாது

வடக்கு,கிழக்கு மாகாண ஆசிரியர்கள் இடமாற்ற சபையின் முடிவுகளை ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டும். மத்திய அரசின் சிபார்சுக் கடிதங்களைப்பெற்றுஇடமாற்றங்களை ரத்துச் செய்யும் நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. சற்குணராசா குறிப்பிட்டார்.

இலங்கைத் தமிழர்ஆசிரியசங்க மட்டக்களப்பு கிளையினரால் மட்/அரசடி மகாவித்தியாலய

—08ஆம் பக்கம் பார்க்க

## விவசாயிகள் நெல்லை அதிக விலைக்கு விற்க நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் நெல்லை கூடிய விலையில் விற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இப்பகுதி மக்கள் ஒரு புசல் நெல்லை 110 ரூபா

— 08ஆம் பக்கம் பார்க்க

## நாலாயிரம் ரூபாவுக்கு நாற்பதாயிரம் ரூபா!

யாழ் நகரில் உள்ள வங்கியொன்றில் நலாயிரம் ரூபா காசோலையை மாற்றிய ஒருவருக்கு நாற்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டது. இதனால் மேற்படி நபருக்காக வங்கி முப்பத்தாறாயிரம்ரூபாவைமேலதிகமாகவழங்கியிருக்கின்றது. தற்போது தவறுதலாக மேலதிகமாக வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள வங்கி முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. (53)

## அமைச்சர் ரஞ்சனின் நடத்தையை சபாநாயகர் நேற்றுக் கண்டிப்பு

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் விடுதலைப்புலிகள் தொடர்பாகக் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூறாமல் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன பாராளுமன்றத்தை விட்டு வெளியேறியது பாராளுமன்றச் சரித்திரத்திலேயே வெட்கப்படவேண்டிய செயல் என சபாநாயகர் நேற்று பாராளுமன்றத்தில்

—08 ஆம் பக்கம் பார்க்க

## இ. போ. ச. தனியார் மயமாகும்

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் டிப்போக்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன.

இத்தகவலைபோக்குவரத்து துறை அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார். சபைக்குச் சொந்தமான ஐம்பது வீதமான பங்குகள் தனியாருக்கு வழங்கப்படவுள்ளது. ஏனைய பங்குகள் படிப்படியாக தனியாருக்கு வழங்கப்படும்.

இதன் பின்னர் சபை நட

—08 ஆம் பக்கம் பார்க்க

## படைப்பாளிகளின் ஆக்கங்களை நூல்வடிவில் வெளியிடத் 'தமிழ்த்தாய்' பதிப்பகம் நடவடிக்கை

இது வரை அச்சில் வராத காவியம், நாவல் குறுநாவல் கவிதைத் தொகுப்பு, சிறுகதைத் தொகுப்பு, குழந்தைக் கவிதைத் தொகுப்பு முதலியவற்றின் கையெழுத்துப் பிரதிகளைப் பரிசிலனைக்கு அனுப்பி உதவுமாறு தமிழ்த்தாய்ப் பதிப்பகத்தினர் தெரிவித்துள்ளனர்.

அச்சிடுவதற்குத் தகுந்ததெனப் பரிசீலனைக்குப் பின்னர் தெரிவான நூல்கள் அச்சிட்டு வெளியிடப் படுமென்றும் படைப்பாளர்கள் தங்கள் கையெழுத்துப் பிரதிகளைப் ''பொறுப்பாளர், தமிழ்த்தாய்ப் பதிப்பகம், விஷ்ணு விஹார் பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்

—08 ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் மட்டு. மேயர் காலமானார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முன்னாள் மேயரும் தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தருமான திரு.ஆர்.அம்பலவாணர் (60 வயது)நேற்று மாரடைப்பால் காலமானார்.

முன்னாள் யாழ் மேயரும் திரு.எஸ்.ஆர். தளையசிங்கத்தின் மருமகனான இவர் ஆறு ஆண்பிள்ளைகளின் தந்தையாவார்.

இவரின் ஈமச்சடங்குகள்

— 8 ஆம் பக்கம் பார்க்க

# மத்தியஸ்தர் தெரிவுப் பரீட்சை தமிழில் நடைபெறும்

புதிய கிரிக்கெற் மத்தியஸ்தர் தெரிவுக்கான பரீட்சை யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் நடைபெற்றது. ஆங்கிலத்தில் நடைபெற்ற இப் பரீட்சையில் சுமார் 22 பேர் வரை கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண கிரிக்கெற் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு கே. பூபாலசிங்கம், உப தலைவர்கள் திரு.பொ. மகேந்திரன் திரு. கே. என். வை. மொறிஸ், செயலாளர் திரு. க. நந்தகுமார், உப செயலாளர் திரு. எஸ். விமலதாஸ் பரீட்சை மேற்பார்வையாளர்களாககடமையாற்றினார்கள்.

அடுத்தமாதம் கிரிக்கெற் மத்தியஸ்தர் தெரிவுக்கான பரீட்சை தமிழில் நடைபெறும் எனச் சங்கத் தலைவர் தெரிவித்தார் (ப.6)


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நடராசா விஸ்வநாதன் ஆகிய எனது அடையாள அட்டை இல 613474285V 6. 4. 90 அன்று யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 40, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஒப்படைக்கும்படி அல்லது அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். 05166


## சாளம்பைக்குளம் கி. மு. சங்கம்

சோனக சாளம்பைக் குளம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் புதியதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் தலைவராக எம். மக்மூல் தெரிவு செய்யப்பட்டுள்ளார். என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச அதிபர் திரு. செ— பத்மநாதன் உதவி அரச அதிபர் திருமதி எமில்டிடாஅற்புதராஜா ஆகியோரின் முயற்சியின் கராணமாக இந்த சங்கம் அங்குரார்ப்பணம்செய்யப்பட்டுள்ளது.

ஏனைய உறுப்பினர்களின் விபரம் உப தலைவர்: க.செய்யது,மு.சு. அப்துல்காதர் செயலாளர் மு. இ, அப்துல்சமது உப செயலாளர் அ. சம்சுதீன் தனாதிகாரி மீ. யாசீன் ஏழு கொண்ட நிர்வாக குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (11)

## பயிலுநர் ஆசிரிய நியமனம்

# இக்குடும்ப உறுப்பினர்க்கு முன்னுரிமை கிடைக்கும்

(மட்டக்களப்பு)

வன்செயலால் உழைப்பாளர்களை இழந்த குடும்பத்தவர்களுக்கு பயிலுநர் ஆசிரிய நியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

கல்வி அமைச்சின் உத்தரவிற்கமைய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மட்ளக்களப்பு மாவட்டத்தில் வன்செயல்களால் குடும்பத் தலைவனை இழந்த அல்லது உழைப்பாளர்களை இழந்த குடும்ப அங்கத்தவர்கள் ஏற்கனவே பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்து பரீட்சைக்கு தோற்றியும் நியமனம் கிடைக்காதவர்கள் எதிர்வரும் முப்பத்தோராம் திகதிக்கு முதல் மேன்முறையீட்டு விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு மட்டக்களப்பு பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம் கேட்டுள்ளார்.

இவர்களின் மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பயிலுநர் ஆசிரியர் நியமனத்தில் இவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என கல்விப் பணிப்பாளர் திரு. சோமசுந்தரம் தெரிவித்தார். (05)

# கனகபுரம்அ.த.க.பாடசாலை இல்லமெய்வல்லுநர்போட்டி

கிளிநொச்சி கனகபுரம் அ. த. க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர்திரு. க ஆறுமுகதாஸ் தலைமையில் பாடசாலை மைதானத்தில் கடந்த 17-ம் திகதி நடைபெற்றது.

பிரதம விருந்தினராக மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. சு. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக கொத்தணி அதிபர் திரு சோதிநாதனும் கலந்து கொண்டனர். வெற்றியீட்டிய வீரர்களுக்கான பரிசில்களை கல்விப்பணிப்பாளர் வழங்கினார்.

19, 17 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான விளையாட்டுகளில் சிறந்த வீரர்களாக பா. சாம் சாந்தகுமாரும் பா. பென்தருமகுமாரும், தெரிவு செய்யப்பட்டு பாராட்டப்பட்டார்கள்.

1ம், 2ம், 3ம், 4ம், 5ம் இடங்களை முறையே நீலம், ஊதா, சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய இல்லங்கள் தட்டிக் கொண்டன.

இறுதியாக விளையாட்டுச் செயலர் திரு. இராமச்சந்திரனின் நன்றியுரையுடன் போட்டிகள் இனிதே முடிவுற்றன.


# COMPUTER COURSES

NEW BATCHES START ON:

| | | |
|---|---|---|
| d—BASE III+ | 26. 05 1990 | 11. 00—12. 30 P. M |
| BASIC | 28. 05. 1990 | 9. 30—11. 90 A. M |

IDP COMPUTER CENTRE
342, K. K. S. Road, Jaffna
(சிவன் கோவிலடி)
BRANCH: IDP - 7th MILE POST, MALLAKAM

05160


# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைகளம் - நல்லூர், யாழ்ப்பாணம்

### பன்முகப்படுத்தப்பெற்ற வரவு செலவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் கட்டட வேலைகள் 1989

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் - பிரதேச கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி (12. 06. 90) மு. ப 10 00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டு வேலைத்திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990 -ம் ஆண்டு யூன் மாதம் 08 ஆம் திகதி (1990. 06. 08) பிற்பகல் 2. 00 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக (ரூபா 50) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா இருநூற்று ஐம்பதும் (ரூபா 250) செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆம் திகதி (1990. 06. 12) முற்பகல் 10. 30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது அறிவிக்கப்பட்ட திகதிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணையின் படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்

இ. சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம். 1990. 05. 18.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. யா/மருதங்கேணி இ. த.க. பா. | 90' × 25' கட்டடம் | 500, 000. 00 |
| 2. யா/வேலணை சைவப்பிர. வித். | 48' 9'' × 25' 0 ' கட்டடம் படிவம்II. பெண்கள் சலகூடம். | 250, 000. 00 |
| 3, யா/நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித். | 90' × 25' கட்டடம் - படிவம் I. | 500, 000. 00 |
| 4. யா/பண்டத்தரிப்புஜசிந்தா றோ. க. த. க. பா. | 48' 9''× 25' 0'' கட்டடம் படிவம் II. | 200, 000. 00 |
| 5. யா/மிருசுவில் றோ. க. த. க. பா. | 60' × 20' கட்டடம் | 250, 000. 00 |
| 6. யா/பண்டத்தரிப்பு இந்துக் கல். | மலசலகூடம் அமைத்தல் | 100, 000. 00 |
| 7. யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித். | 48' × 25' கட்டடம்-படிவம் I. | 250, 000. 00 |
| 8. யா/இளவாலை கன்னியர் மடம் மகா. வித். | 40' × 25' கட்டட தொடர்ச்சி | 200, 000. 00 |

05163

## கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகம்

# சாவகச்சேரிக்கு 3சக்கர சைக்கிள் அன்பளிப்பு

கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகம் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு இரு மூன்று சக்கர சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான இரண்டு மூன்று சக்கர சைக்கிள்களையும் பெற்றுக் கொண்ட சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் திரு. வி. பி. தியாகராஜா, கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பு வைத்தியசாலை

# புனரமைப்பு நோககில் புதியகுழு தேரிவானது

மட்டக்களப்பு பொது அரசினர் வைத்தியசாலை குழு கலைக்கப்பட்டு புதிய குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. ஆர். யோகநாதன் தலைமையில் அரச செயலகத்தில் நடைபெற்ற வைத்தியசாலைப் புனரமைப்பு தொடர்பாக நடைபெற்ற மகாநாட்டிலேயே இக்குழு தெரிவு செய்யப்பட்டது.

வடக்கு கிழக்கு மகாண பெருந் தெருக்கள் திணைக்களப் பணிப்பாளர்திரு.ஜலைரின்இராஜேந்திரம்தலைமையிலான புதிய வைத்தியசாலைக் குழுவின் அங்கத்தவர்கனின் பெயர் விபரம் மத்திய சுகாதார அமைச்சுக்கும் மாகாண சகாதார அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படுட்ள்ள தாகத் தெரிவிக்படுகின்றது.

இதுவரைகாலமும் இயங்கி வந்த வைத்தியசாலைக்குழு முன்னைய அரசாங்க எம். பி.களின் சிபார்சில் நியமிக்கப் பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (05)

தற்போது நியமிக்கப்பட்ட புதியகுழு எந்த ஒரு அரசியல் தலையீடும் இன்றி தெரிவு செய்யப்பட்டதாக தாகத்தெரிவிக்கப்படுகிறது. 5

# சனசமூக நிலையங்களின் சமாசம் திறம்பட செயற்படுகின்றது

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்ட சமாசங்கள் மிகுந்த பிரயாசத்தின் மூலமே அமைக்கப்பட்டன. இவ்வாறு சமாசங்களை அமைப்பதற்கு எடுத்த முயற்சிகள் மிகுந்த வெற்றியை அளித்துள்ளன வென்றே கூறவேண்டும். சமாசங்களின் செயற்பாடுகளை நாம் அவதானிக்கும் போது அதன் ஆரம்பகர்த்தாக்களை மறந்துவிட முடியாது.

இவ்வாறு யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தால் நடாத்தப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்து கொண்ட வடகிழ்மாகாணத்தின் உள்ளூராட்சிப் பிரிவுக்குரிய கணக்காளர் திரு. ஆ இரகுநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்

அவர் தொடர்ந்து பேசுகையில் யாழ் மாவட்டத்தில் இயங்குகின்ற எல்லா சமாசங்களிலும் பார்க்க யாழ். மாநகர ச. ச. நிலையங்களின் சமாசம் மிகுந்த ஈடுபாட்டுடன் மிகவும் முன்னோடியான நடவடிக்கைகளை முன்வைத்துச் செயற்பட்டு வருவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும் என்று தெரிவித்தார்.

# இருதலைக்கொள்ளி

முள்ளை விதைத்துவிட்டு நெல்லை அறுக்க முடியுமா?

பிரிவினைக்கு எதிரான 6—வது திருத்தச் சட்ட மூலம் முன்னர் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதற்காக முழு மூச்சாக நின்று குரல் கொடுத்தவர் தற்போதைய ஜனாதிபதி பிரேமதாஸ.

இப்போது 6—வது அரசியல் திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டிய அவசியத்தை அவரே கொண்டுள்ளார்.

இதனால் ஏற்படவுள்ள அரசியல் எதிர்ப்பையும் அவரே முகம் கொடுக்க வேண்டியவராகவுள்ளார்.

இதே போன்ற தொரு இக்கட்டான நிலையில்தான் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவும் தற்போது உள்ளார்.

ஒரு இலட்சம் மலையக மக்களை பலவந்தமாக இந்தியா அனுப்ப வேண்டும் என்ற கோஷத்தைப் பலமாக முன்வைத்தவர் அமைச்சர் ரஞ்சன்.

இன்னும் ஓரிரு வாரத்திற்கிடையில் அவரே அதனை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டியவராகவுள்ளார்.

இதனை விதி என்பதா? சதி என்பதா?

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக முன்னர் இருந்தவர் காமினி திஸநாயகா.

அவர் அமைச்சர் பதவியுடன் அதனையும் தூக்கி எறிந்து விட்டார்.

இச் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் மலையகத் தொழிலாளர்களுக்கான தொழிற் சங்கமாகும்.

காமினி விலகியதைத் தொடர்ந்து கடந்த வியாழன் நடைபெற்ற சங்கக் கூட்டத்தில் ரஞ்சன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

தற்போதைய பெருந்தோட்டத் தொழில் துறை அமைச்சராக ரஞ்சன் உள்ளதால் அவர் தலைவராக வேண்டி ஏற்பட்டது.

சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைமையகத்தில் ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது.

மலையகத் தமிழர்களை நாடு கடத்துவதைக் கண்டித்தும் அதனை நிறுத்தக் கோரியும் கூட்டத்தில் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது.

தொழிற்சங்கத்தின் உதவிச் செயலாளரும், ஊவா மாகாண சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினருமான திரு. கே. வேலாயுதம் பிரேரணையை முன்மொழிந்து பேசினார்.

அதனை மத்திய மாகாண சபை ஐ.தே. க உறுப்பினரும் இ.தே.தோ, தொழிலாளர் சங்க உப தலைவருமான திரு. கே,புத்திரசிகாமணி வழி மொழிந்து பேசினார்.

கட்சியின் செயலாளர் திரு, ராஜா செனிவரத்னாவும் பிரேரணையை ஆதரித்துப் பேசினார்.

அமைச்சர் ரஞ்சன் முன்னிலையில் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மலையகத் தமிழரை பலவந்தமாக நாடு கடத்துவதைக் கண்டித்தும் அதனை நிறுத்தக் கோரியும் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில் அவரே கையொப்பம் இடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இப்போது அவருககு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பேச்சாளர் என்ற நிலையில் மலையக மக்கள் விடயத்தில் அவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டியவராக உள்ளார்.

இதே சமயம் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் என்ற ரீதியில் மலையக மக்களுக்காக குரல் கொடுக்க வேண்டியவராகவும் உள்ளார்.

இரு தலைக் கொள்ளி எறும்பின் நிலையில் உள்ள அவர் மனச்சாட்சிக்காக நீதிக்காக துயருறும் மக்களுக்காக அதிகம் குரல் கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## இதயநாதம்

வெள்ளிக்கிழமை 25-05-1990

நல்வாக்கு

தானாக வருவதில்லை சந்தர்ப்பம். அதனை மனிதன் தானே உண்டுபண்ணிக் கொள்ள வேண்டும்.

—பெர்னாட்ஷோ

[illegible]

# நிக்கரகுவாவில் அமெரிக்க ஆதிக்கத்தின் இறுக்கம்

நாற்பது வருடங்களுக்கு மேலாக ஈவிரக்கமற்ற அடக்குமுறை ஆட்சி, நடத்திய சர்வதிகாரி சோமோசாவின் ஆட்சி எவ். எல். எல். என். என்றழைக்கப்படும் இடதுசாரி ''சன்னிஸ்ரா'' இயக்கத்தினால் தூக்கி வீசப்பட்டது.

சோமோசாவின் ஆட்சியின் கீழ் பல்லாயிரக்கணக்கான மக்கள் சுட்டு பொசுக்கப்பட்டனர், அக்கொடிய ஆட்சியின் இறுதி இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஐம்பதாயிரம்பேர் கொன்று குவிக்கப்பட்டனர். அதேவேளையில் மிகக் கடுமையான பசி பட்டினியும் அங்கே நிலவியது.

ஆனால் சோமோசா குடும்பத்தினர் பிரமாண்டமான சொத்துக்களை தம்வசம் திரட்டி வைத்திருந்தனர். 1979 வரையில் ஆயிரத்தி ஐந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்களையும் அதைவிட பெருந்தொகையான பணத்தை வெளிநாட்டு முதலீடாகவும் அக்குடும்பம் வைத்திருந்தது. மேலும் சோமோசாவிடம் அந்நாட்டு கைத்தொழில்துறையில் இருபத்தைந்துவீதம் கொண்ட நூற்றைம்பது தொழிற்சாலைகள் பத்துவீதம் கொண்ட வளமான காணி நாட்டின் ஒரே ஒரு விமானசேவை நிறுவனம் ஒரு தொலைக்காட்சி நிலையம் போன்ற இன்னும் பல சொத்துக்களும் சோமோசாவிற்கு சொந்தமாய் இருந்தன. சோமோசாவின் இத்தகைய ஆட்சியை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதரித்து வந்ததை யாரும் அறிவர்.

இத்தகைய நிலையிலேயே 1979—ல் ஜனாதிபதி டியால் ஒட்டேகாவின் தலைமையில் ''சன்டினிஸ்ரா'' அரசாங்கம் பதவி ஏற்றது. அவ்வரசாங்கத்தை கூடிய விரைவில் வீழ்த்திவிட வேண்டுமென்று அமெரிக்க ஏகாதிபத்தியமும் நிக்கரகுவாவில் உள்ள அதன் கையாட்களும் கங்கணம் கட்டினர், 'கொன்றாஸ்' என்ற எதிர்ப்புரட்சிப் படையை ஏவிவிட்டு ஒட்டேகா அரசிற்கு எதிராக போர் தொடுக்கப்பட்டது. ''சன்டினிஸ்ரா'' அரசாங்கத்தில் ஆரம்பத்தில் பங்கு பற்றிக் கொண்டிருந்த சமூக ஜனநாயக கட்சியை சேர்ந்த அல்பிறடோ சீசர் என்பவர் 'கொன்றாஸ்' அணியும் இணைந்து செயலாற்றும் அளவிற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்கம் அமைந்திருந்தது.

அதுமட்டுமல்லாமல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி றொனால்ட் றீகன் ஈரானுக்கு ஆயுதங்களை விற்றுப்பெற்ற பெருந்தொகையான பணத்தை 'கொன்றாஸ்' படையினருக்கு வழங்கி யுத்தத்தை உக்கிரப்படுத்தினார். இதன் காரணமாக நாட்டு வருமானத்தில் ஐம்பது வீதம் பாதுகாப்புச் செலவினங்களுக்கு ஒதுக்க வேண்டிய நிலைக்கு 'சன்டினிஸ்ரா' அரசாங்கம் தள்ளப்பட்டது, ஏறத்தாழ எழுபதாயிரம்பேர் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

1990 பெப்ரவரி 25—ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 'சன்டினிஸ்ரா' அரசாங்கம் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று. அமெரிக்காவின் முழு ஆதரவுடன் தேசிய ஒற்றுமை அமைப்பு (யூ.என்.ஓ) சார்பில் போட்டியிட்ட வயலட்டா கமொறோ 54.2% வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். டானியல் ஒட்டேகா தேர்தல் தோல்வியை ஏற்றுக் கொண்ட போதும் நமது ஆட்சியின்கீழ் ஏற்படுத்திய முன்னேற்றங்கள் பாதிக்கப் படுவதை தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்று கூறியிருந்தார்.

சோமோசா ஆட்சியின்கீழ் எழுபத்தைந்துவீதமாகஇருந்த கல்வியறிவின்மை 'சான்டினிஸ்ரா' ஆட்சியில் பதினான்கு வீதமாகக் குறைக்கப்பட்டது. முப்பது வீதம் பிள்ளைகளின் அநியாய இறப்புக்கள் தவிர்க்கப்பட்டன. நாடு பூராவும் ஆயிரம் டாக்டர்கள் மட்டும் என்ற நிலையிலிருந்து இரண்டுவருடமொன்றுக்கு ஐந்நூறு டாக்டர்கள் உருவாக்குதல் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டது. முப்பத்திமூன்று வீதம் குழந்தை மரணம், 8 வீதமாகக் குறைக்கப்பட்டது. பிரதான உணவுவகைகள் சராசரி முப்பத்தைந்து வீதம் கூடுதலாக மக்களுக்குக் கிடைத்தன.

ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் 'கொன்றாஸ்' மூலம் முடுக்கி விடப்பட்ட யுத்தத்தின் காரணமாக பொருளாதார சீர்குலைவுகள் ஏற்பட்டதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பாதிப்பு ஏற்பட்டது.

கடுமையான பணவீக்கம் உண்டாகியது. உதாரணமாக பணவீக்கம் எழுபத்தொன்பதுவீதமாக உயர்ந்தபொழுது சம்பளங்கள் நூற்றியிருபது வீதமாக மட்டுமே உயர்த்தப்பட்டன, அத்துடன் சர்வதேச நாணய நிதியம் (IMF) மக்களின் பசி பட்டினியை மறந்து தனது வழமையான சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தியது.

மேலும் 1979-ல் 565.5 கோடி அமெரிக்க டொலர் தொகையாயிருந்த விவசாய ஏற்றுமதி வருமானம் 1988-ல் 235.7 கோடி டொலராக குறைந்தது. ஏகாதிபத்தியத்தின் பொருளாதாரத் தடைகளே இத்தகைய வீழ்ச்சிக்குக் காரணம்.

### 'சன்டினிஸ்ராக்களின் தவறுகள்'

மேல் மட்டத்திலுள்ள 'சன்டினிஸ்ரார்கள்' பலர் இராஜதந்திரிகளுக்கு வழங்கப்படும் சலுகை விலைகள் அடிப்படையில் பொருட்களைப் பெற்று வந்தனர். அத்துடன் 'சன்டினிஸ்ரா' ஆட்சியாளர்கள் பொருளாதாரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததுறைகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவோ ஏனைய மத்திய அமெரிக்க நாடுகளுக்குப் புரட்சியைப் பரவச் செய்யவோ தவறிவிட்டனர். இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டைத் தவிர்ப்பதற்காக என்று கூறப்பட்டபோதும், இத்தகைய விட்டுக்கொடுப்பே 'சன்டினிஸ்ராக்களுக்கெதிராகப் பாவிக்கப்பட்டது.

மேலும், 'சண்டினிஸ்ரா' ஆட்சியாளர் சிறுபான்மையினராகிய மிஸ்கிற்றோ இந்தியர்களின் அபிலாஷைகளையும் கோரிக்கைகளையும் உதாசீனம் செய்யாமல் செயலாற்றியிருந்தால் ஆட்சியாளரின் கை மேலோங்கியிருக்கும் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டத்துக்கு மிஸ்கிற்றோ இந்தியர்களின் வீரம் செறிந்த ஆதரவு கிட்டியிருக்கும் அவர்களின் சுயாட்சிக் கோரிக்கை மறுக்கப்படுவது மல்லாமல், அவர்களின் பல்லாயிரக்கணக்கானோரை மோசமானமுறையில் சொந்த இடங்களிலிருந்து வேறு இடங்களுக்குக்கொண்டு சென்று குடியமர்த்தப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு சகதியாக விளங்கவேண்டிய இம்மக்கள் ஏகாதிபத்தியத்தின் கையாட்களாக மாறி 'கொன்றாஸ்' அணியினருக்கு ஆதரவளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது முற்றிலும் துரதிர்ஷ்ட வசமானதாகும்.

ஓரளவு 'சன்டினிஸ்ரா' ஆதரவாளர்கள் கூட அவர்களுக்கெதிராக வாக்களித்தற்குக் காரணம் வயலற்றா காமா றோவின் யூ. என் ஓ. கட்சி ஒரு பலம் வாய்ந்த எதிரணியாக விளங்கட்டும் என்பதற்காகவே அன்றி 'சன்டினிஸ்ராக்கள்' தோற்க வேண்டுமென்பதற்காக அல்ல.

எது எப்படியிருப்பினும் 'சன்டினிஸ்ராக்'கள் எதிர்காலத்தில் தமது தவறுகளை திருத்தி, குறிப்பாக சிறுபான்மையினரை அரவணைத்து நேச சக்திகளாக்கி சரியான மாக்ஸிஸ - லெனினிச பாதையில் போராடிக்கொண்டிருப்பது மிக அவசியம் என்பது தெளிவாகும். மத்திய அமெரிக்க நாடுகளில் உள்ள முற்போக்கு சக்திகளையும் இணைத்து மத்திய அமெரிக்க சோஷலிஸக் குடியரசு அமைப்போம் என்ற கண்ணோட்டத்துடனும் உத்வேகத்துடனும் 'சன்டினிஸ்ரா' இயக்கம் செயல்படவேண்டும்

## முறைசாராக்கல்வி

# போதனாசிரியர் சங்க நிர்வாகிகள் தெரிவு

யாழ்மாவட்ட முறைசாராக் கல்விப் போதனாசிரியர் சங்கத்தின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் யாழ் நல்லூர் சாதனா பாடசாலையில் இடம்பெற்றது. முறைசாராக்கல்வி வெளிக்கள அலுவலகர் திரு. எஸ்.சி. எஸ். சிதம்பரநாதன் நெறிப்படுத்தலின் கீழ் நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது.

தலைவர்: திரு. எஸ்· சூரியகுமாரன் (படவரைஞர்பயிற்சி போதனாசிரியர்)செயலாளர்: திரு. க. அருளானந்தன், பொருளாளர்: செல்வி திருமகள் சுப்பிரமணியம் (ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து போதனாசிரியை) உப தலைவர்: செல்வி கமலாதேவி வேலுப்பிள்ளை (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்) உப செயலாளர்: திருமதி சாவித்திரி நவரத்தினம் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்)

நிர்வாகசபை உறுப்பினர்களாக போதனாசிரியர்கள் திரு. எஸ். சிவப்பிரகாசம், திரு. கி சிவநேசன் திரு. கே. குணசிங்கம் ஆகியோர் உட்பட போதனாசிரியைகள் திருமதி ப. தாமோதரம்பிள்ளை திருமதி ந. கணேசலிங்கம், திருமதி எஸ். பேரானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மானிப்பாய் ஆங்கில பாடசாலை:

# 'அந்த' வசதியின்மையால் அடையும் இடர் நீங்குமா?

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கும் 1600 மாணவர்களும் 65 ஆசிரியர்களும்தமது இயற்கை உபாதையை அகற்ற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இப்பாடசாலையில் இருந்த ஒரேயொரு பாவனைக்குதவாத பழைய மலசல கூடமும் அண்மைக்கால வன்செயல்களோடு சேதமாக்கப்பட்டுள்ளது.

தற்போது இரண்டு நேரப் பாடசாலை நடைபெறுவதால் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையும் இயற்கைக் கடனைக் கழிக்க வசதி இல்லாமையால் தாம்பெரிதும் சிரமப்படுவதாக மாணவர்களும், ஆசிரியர்களும் தெரிவித்தனர். (45)

# செய்தி மஞ்சரி

## பலர் விண்ணப்பம்

திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமாணி தொழில் நுட்ப பயிற்சித்திட்ட டிப்ளோமா பயிற்சி நெறிகளுக்கு தொழில் புரிவோர் பலர் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பத்துறையைச் சார்ந்த சிறு வர்த்தக முகாமை சார்ந்த புதிய துறைகளுக்கான சான்றிதழ்கள் பிரபலமாக வந்துள்ளன.

இக்கற்கை நெறிகளுக்கு புகுமுகத் தகைமைகள் தேவையில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் க. பொ. த. உயர்தரப் பரீட்சை சான்றிதழ்கள் உள்ளவர்கள் விதி விலக்குப் பெறத் தகுதி பெறுவர்.

தத்தமது தொழில் துறையில் இருந்து கொண்டே திறந்த பல்கலைக்கழக கற்கை நெறிகளை பயில முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பளப்பாக்கி கிடைக்கும்

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக மேற்படி கூட்டுத்தாபன காங்கேசன்துறை தொழிற்சாலையில் வேலை செய்தோருக்கு கொடுக்க வேண்டிய சம்பளப்பாக்கியாகிய 54 லட்சம் ரூபாவைக் கொடுக்க ஒத்துக்கொண்டுள்ளது.

இது சம்பந்தமாக அண்மையில் கொழும்பில் தொழில் ஆணையாளர் நடத்திய விசாரணையை அடுத்தே மேற்படி தொகையைக் கட்டம், கட்டமாக வழங்க கூட்டுத்தாபனம் ஒத்துக் கொண்டது.

முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபா யாழ். உதவித் தொழில் ஆணையாளரால் விரைவில் வழங்கப்படவுள்ளதாக மல்லாகம் அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் தெரிவித்தார்.

## கடத்தலில் பெண்

36 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று கிலோ கெரோயின் போதை மருந்தினை வவுனியாவிலிருந்து கடத்திச் சென்ற நான்கு பிள்ளைகளின் தாய் ஒருவர் கடந்த ஞாயிறன்று கொழும்பில் வைத்து போதைவஸ்து ஒழிப்பு பணியகத் துப்பறிவாளர்கள் கைது செய்யப்பட்டார்.

இந்த கெரோயினை தலையணை உறை ஒன்றுக்குள் ஒளித்து வைக்கப்பட்டு சூட்கேசுக்குள் வைக்கப்பட்டிருந்தது. இந்த சூட்கேசின் திறப்பு சந்தேக நபரிடம் இருந்தது.

கொழும்பு விடுதி ஒன்றிலே இப்பெண் கைது செய்யப்பட்டார்.

## வழிபாட்டுத்தல புனரமைப்பு

வடக்கு கிழக்கு மாகாணசபை மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் உள்ள சமய வழிபாட்டுத் தலங்களை புனரமைத்து வருகின்றது.

இத்திட்டத்திற்கமைய பட்டக்களப்பு மாவட்ட ஆலயங்களுக்கான புனரமைக்கு 53,415 ரூபாவும், திருகோணமலை மாவட்ட சமய தலங்களின் திருத்த வேலைக்கு 170500 ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 174950 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

## பஸ் சேவைக்கு மறுப்பு

ஆலையடி வேம்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வனக்குறவர்கள் வாழும் தேவ கிராமத்திற்கான பஸ் சேவையை நடத்த முடியாதென அக்கரைப்பற்றுத் தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளதாக அக்கரைப்பற்று ஆரோக்கிய மாதா ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு. றோயல் இமானுவேல் வருத்தம் தெரிவித்துள்ளார்.

## புரிந்துணர்வின் அவசியம்

''தமிழ்—சிங்கள மக்களிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படவேண்டும். இரு பகுதியினரும் ஒற்றுமையாகவும், சமாதானமாகவும் வாழ வேண்டும் என்ற பெருநோக்கோடு பாதயாத்திரை மேற்கொண்டு வவுனியா வந்த உங்கள் அனைவரையும் இருகரம் நீட்டி வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.''

இவ்வாறு வவுனியா நகர சபை வீடுதிகள் பகுதியின் முக்கிய பிரமுகரான திரு.க.சிவசுப்பிரமணியம் மதவாச்சியில் இருந்து வவுனியாவுக்குப் பாதயாத்திரை வந்த சுமார் 6 ஆயிரம் சிங்கள—முஸ்லிம் மக்கள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

## கர, வலைப் பந்தாட்டம்

எதிர்வரும் ஜூன் மாதம் 23—ம் திகதி தொடக்கம் ஜூலை 3—ம் திகதிவரை கண்டி, பள்ளேகலையில் நடைபெறவுள்ள கம்உதாவக் கொண்டாட்டத்தையொட்டித் தேசிய இளைஞர் சேவை மன்றம் திறந்த, ஆண்—பெண்களுக்கான கரபந்தாட்ட, வலைபந்தாட்டப் போட்டிகளை நடத்தத்திட்டமிட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் குழுக்களுக்குக் கம்உதாவ வெற்றிக் கிண்ணமும், முறையே 2000. 1500, 500 ரொக்கப் பரிசுகளும் வழங்கப்படவுள்ளன. இத்தகவல் வவுனியாவில் வெளியிடப்பட்டது.

### ஜப்பான் உதவியுடன்

# மட்டக்களப்பில் கட்டிடப் பொருள் தொழிற்சாலை உருவாகும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டிடப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று ஜப்பானிய அரசின் உதவியுடன் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் திரு. கே. பத்மநாதன் இத்தகவலை வெளியிட்டார்.

ஜப்பானிய அரசின் உதவியுடன் இலங்கை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்தே இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தவுள்ளன.

இத்தொழிற்சாலைகளில் வீடு கட்டுவதற்குத் தேவையான கதவு, யன்னல், செங்கல். ஓடு போன்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன.

மேற்படி திட்டத்தின்கீழ் மாவட்டத்திலுள்ள பத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நாவற்குழியின் முன்மாதிரி செய்தித்தாள் பார்வை

பாடசாலையிலும் செய்திக் கண்ணோட்டம், ஆம் இப்புதிய முன்மாதிரி நடைமுறை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முதல் செயற்படுத்தப்படுகின்றது. ''பெனின்சுலா'' நிறுவனம் 15 ஆயிரம் ரூபா செலவில் இவ் வித்தியாலயத்துக்கு அன்பளிப்புச் செய்த ஒலிபெருக்கிச் சாதனம் மூலம் காலை வேளைகளில் ஆராதனையின் பின்னர் தினமும் தமிழ்த் தினசரிகளில் உள்ள பயன்பாடுள்ள செய்திகளை மாணவ, மாணவிகளுக்கு வாசித்துக் காட்டப்படுகின்றன. பொதுவான அறிவு வளர்ச்சிக்கும், பத்திரிகை வாசிப்பில் ஈடுபாட்டை உண்டாக்கவுமே இந் நடைமுறை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது மாணவர் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

## வலி-மேற்கில் சிற்றூர் அவை அமைப்புத் துரிதமாகின்றது

சங்கானை, சுழிபுரம், பொன்னாலை, மூளாய், தொல்புரம் ஆகிய இடங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைகள் அமைக்கப்பட்டுள்ளன.

தமது பிரதேசத்திலுள்ள ஏனைய இடங்களிலும் சிற்றூர் அவைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக விடுதலைப்புலிகள் இயக்கவட்டுக்கோட்டைப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஆர். ஐயர் இதுபற்றி முரசொலிக்குத் தகவல் தருகையில் தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் கிராம ரீதியில் கருத்தரங்குகளும் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(13)

### அக்கராயன் வித்தியாலய

## விஞ்ஞான ஆய்வு கூடம் ஆட்டம் கண்ட நிலையில்

கிளிநொச்சி மாவட்டத்தின் கொத்தணிப் பாடசாலையில் ஒன்றான அக்கராயன் மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடம் எந்நேரத்திலும் இடிந்து விழும் நிலையிலேயுள்ளது.

சேதமுற்ற கூரையுடன் காணப்படும் இந்த ஆய்வு கூடத்தினுள் நுழைவதற்கு ஆசிரியர்களும் மாணவர்களும் அச்சமடைகின்றனர்.

இவ் வித்தியாலயத்துக்கு எனப்புதிதாகக் கட்டப்பட்ட கட்டத்தின் கதவுகள் தாமே சுழன்று கீழே விழுகின்றன. சில ஒற்றைக் காலிலே நிற்கின்றன.

புதிதாகக் கட்டப்படும் இக் கட்டத்தின் இழிவான நிலையையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. கஷ்டப்பிரதேசக் கட்டங்களின் நிலை இவ்வாறு அமைந்துள்ளனவே எனப் பெற்றோர்களும். மாணவர்களும், நலன் விரும்பிகளும் வேதனை அடைகின்றார்கள்.

(23)

## இவ்வருட சாம்பியன்

(வண்ணார்பண்ணை)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர்ப் போட்டியின் இறுதியில் யாழ். கோட்டப் பிரிவு இவ்வாண்டு சாம்பியனாயிற்று.

பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவு இரண்டாமிடத்தையும், மருதனாமடம் கோட்டப் பிரிவு மூன்றாமிடத்தையும் பெற்றன.

இருநூற்றி நாற்பத்துநாலு புள்ளிகளைப்பெற்று முதலிடத்தைச் சுவீகரித்துக் கொண்ட யாழ்-கோட்டக்கல்விப் பிரிவுக்கு இதற்கானவெற்றிக் கேடயத்தை யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இராசுந்தரலிங்கத்தின் பாரியார் திருமதி தேவராணி சுந்தரலிங்கம் கடந்த வியாழக்கிழமை மாலை வழங்கினார் யாழ். கோட்ட உதவிப்பணிப்பாளர் திரு சி. தியாகராசா இதனைப் பெற்றுக்கொண்டார்.

இரண்டாவதிடத்தைப் பெற்றபண்டத்தரிப்புக் கோட்டப் பிரிவுக்கான வெற்றிக் கேடயத்தை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பெற்றார்.

## நஷ்டஈடு வழங்குவதற்கு திறைசேரி நிதி ஒதுக்கீடு

ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெற விண்ணப்பித்துள்ள முதலாவது தொகுதி 5442 ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு திறைசேரி 15 கோடி ரூபாவை இலங்கை மத்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கியுள்ளது.

நிதி அமைச்சிடம் கோரப்பட்ட 60 கோடி 40 இலட்சம் ரூபாவில் முதல் தவணைப் பணமாக இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

சேவைக்கால நஷ்டஈட்டுக் கொடுப்பனவுத் தொகையாக வழங்குவதற்கு 12 கோடி ரூபாவும், ஊழியர் சேமலாப நிதி ஊழியர் நம்பிக்கை நிதிப் பணமாக கொடுப்பதற்கு 33 கோடி 40 இலட்சம் ரூபாவும் தேவைப்படுகிறதென அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

திறைசேரியிடம் இருந்து மிகுதித் தொகை கிடைத்தும் இக் கொடுப்பனவுகள் உடனடியாக வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெறுவதற்கு மேலும் 1558 ஊழியர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

## கிளிநொச்சியில்...

''இயேசு ஜீவிக்கிறார்'' ஆத்மீக சரீர தெய்வீக குணமளிக்கும் கூட்டம் கிளிநொச்சிமத்திய மகாவித்தியாலயத்தில் யூன் மாதம் 5ம்,6ம்,7ம் திகதிகளில் தினமும் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

சகோதரர் எஸ்.ராஜேந்திரம் செய்தி அளிப்பார்.

# மன்னாருக்கு ஐ.நா. அபிவிருத்தி திட்டப் பிரதிநிதி விஜயம்

அடம்பன் வங்காலை குடிநீர் விநியோகத் திட்டங்களை உடன் செய்து முடிக்காவிடின் முன்பு செய்த சேவைகள் பாழடைந்துவிடும் என அண்மையில் மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டு மேற்படித் திட்டங்களைப் பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட நிரந்தர பிரதிநிதி றொபேட் இன் கீலனிடம் கருத்துத்தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுத் திட்டங்களை பார்வையிடும் பொருட்டு அண்மையில் விஜயம் செய்த ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிரந்தரப் பிரதிநிதி திரு. றொபேட் இன் கீலன் அடம்பன் வங்காலை குடிநீர் விநியோகத் திட்டங்களைப் பார்வையிட்டனர்.

### உதவிப்பணிப்பாளர் உரை

# மாணவர் நலனே ஆசிரியர் இலட்சியமாதல் வேண்டும்

(வண்ணார்பண்ணை)

''மாணவர்களுக்கு நலன் பயக்கும் சகல விடயங்களிலும் நாம் உதவ வேண்டும். மாணவர்களது நலமே நமது இலட்சியமாக அமைய வேண்டும். பாடசாலைகள் மாணவர்களது ஆற்றல்களை வளர்ப்பதற்குத் தூண்டுதலளிக்க வேண்டும். பேச்சு, கட்டுரை, இசை, நடன, நாடகப் போட்டிகள் யாவும் இந்நோக்குடனேயே நடத்தப்படுகின்றன.''

இவ்வாறு யாழ். கோட்டப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராசா யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய வீரர்கள் தினத்தை ஒட்டிய பேச்சுப் போட்டிகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்வி அதிகாரி திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் யாழ். கோட்டப் பிரிவைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர்.

திரு. தியாகராசா தொடர்ந்து பேசுகையில்: மாணவர்களது ஆற்றல்களைக் கண்டறிந்து அவற்றை விருத்தி செய்வதில் ஆசிரியர்கள் தங்கள் கவனத்தைச்செலுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கோண்டாவில் கொத்தணி அதிபர் திரு. க. சொக்கலிங்கம் உட்பட மற்றும் பலரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

### பாடசாலை அதிபர்கள்

## கல்வி சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்

(வலிகாமம்)

''கல்வித் திணைக்களமோ அதிகாரிகளோ பணிக்கும் கடமைகளை மட்டும் வெறுமனே செய்துவிட்டுத் தமது பணி முடிந்து விட்டதென திருப்திப்படும் பாடசாலை அதிபர் சேவையிலும் பார்க்க விதிக்கப்பட்ட கடமைகளுடன் மாணவர்களதும் ஆசிரியர்களதும் பல்வேறு கல்வி சார்ந்த தேவைகளைத் திட்டமிட்டுப் பூர்த்தியாக்க முனைந்து பூரணத்துவமான கல்வியை வழங்க முனைவதே உண்மையான அதிபர் சேவையாகும்.'

இந்த வகையில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கொத்தணி ரீதியாக உடல்— உடல்நலக் கல்விக் கருத்தரங்கினையும் ஐந்து முழுநாள் செயலமர்வினையும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் இணைத்து நடாத்துகின்ற வெற்றிகரமான பரீட்சார்த் முயற்சியினை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்'' இவ்வாறு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட உடல்— உடல்நலக் கருத்தரங்கிற்கும் செயலமர்வுக்கும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கூறினார்.

காங்கேசன்துறைக் கொத்தணி அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப விழாவில் யாழ். மாவட்டக் கல்விப் பணிமனையின் சேவைக்காலப் பயிற்சிக்குப் பொறுப்பான கல்வி அதிகாரி ஜனாப் இனானு அவர்களும் கலந்து உரையாற்றினார்.

இச்செயலமர்வில் 80 மாணவர்களும், 25 ஆசிரியர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (32)

## பெரியவிளான் பாடசாலை இட நெருக்கடி நீங்கும்

(சங்கானை)

பெரியவிளான் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்கள் நீண்டகாலமாக அனுபவிந்து வரும் இடநெருக்கடியை நீக்கு முகமாக இரு புதிய கட்டிடங்கள் தற்போது நிறுவப்பட்டு வருகின்றன.

சுமார் மூன்று இலட்ச ரூபா செலவில் இந்த இரு கட்டிடங்களும் நிறுவப்பட்டு வருவதாகவும், வகுப்பறைகள் இந்த கட்டிடங்களில் இடம் பெறவிருப்பதாகவும் இது பற்றித் தெரிவிக்கப்படுகின்றது. (13)

## சாத்தப்பட்ட கதவு சங்கடங்கள் பலவாகின்றன

(காரைநகர்)

மானிப்பாய் பிரதான தபாற்கந்தோர் கடந்த சில நாட்களாக நுழைவாசல் கதவு ஒன்று சாத்தப்பட்ட நிலையில் இயங்குகிறது.

தபாற்கந்தோர் வளவினுள் துவிச்சக்கர வண்டிகளோ, வேறுவாகனங்களோ உட்செல்லவோ, நிறுத்தவோ முடியாதவாறு குறுக்கே கட்டைகள் கழிவு இரும்புப் பொருட்கள் போட்டு மறிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்களும், தபாலக ஊழியர்வளும் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். (45

## விவசாயிகள் நலன் கருதியே கழகம் உருவாகின்றது

### - எஸ். பி. கே. பாப்பா

(மட்டுவில்)

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி பகுதிகளின் கீழ் உள்ள சகல சிற்றூரவைகளினாலும் தெரிவு செய்யப்பட்ட தமிழ் ஈழவிவசாயிகள் கழகம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் அங்குரார்ப்பணம்செய்துவைக்கப்பட்டது.

தென்மராட்சி மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு.பாப்பா பேசுகையில் இக்கழகத்தை அமைப்பதன் நோக்கம் விவசாயிகள் மத்தியில் எழும்பிரச்சினைகளை அறியவும் அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தமிழ்ஈழமண்ணில் உணவு உற்பத்தியை அதிகரிக்கவும் ஆகும் என்றார்.

யாழ் மாவட்ட பொறுப்பாளர் டொமினிக் பேசுகையில் வடமாகாணம் முழுவதிலும் உள்ள சகல சிற்றூரவைகளிலும் விவசாயிகள் கழகங்களை அமைப்பதன் மூலம் விவசாயிகளை ஊக்குவித்து அவர்களது வருவாயை அதிகரிக்கச் செய்து வருகிறது. இதற்கு விவசாயிகளான நீங்கள் எமக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். உங்கள்மத்தியில் எழும் பிரச்சினைகளை எமக்கு எழுத்துமூலம் அறியப்படுத்தினால் நாம் ஆவன செய்வோம் என்றார்.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டக்காரியாலயத்தை சேர்ந்த செவ்வந்தி நாதன் விவசாய ஆசிரியர் மூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர் பாப்பா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது' (ப.4)

## வெகுவிரைவில் வருடாந்த கூட்டம்

மன்னார் பொது ஊழியர் சிக்கனச் சேமிப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தை வெகு விரைவில் கூட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டிருக்கிறது.

86-87, 87-88, 88-89ஆகிய மூன்று நிதி ஆண்டுகளுக்குமுரிய கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக்கணக்குகளின் பிரதிகள் வெளியிடப்பட்டுள்ளன.

உத்தேசிக்கப் பட்டிருக்கும் ஆண்டுப்பொதுக் கூட்டத்தில் பிரேரணைகள் ஏதும் சமர்ப்பிக்க அங்கத்தவர்கள் கருதினால் இம்மாதம் 14ம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். (17)

# 144 சரக்குக் கப்பல்கள் திருமலைக்கு வந்துள்ளன

திருகோணமலைத் துறை முகத்தில் கடந்த வருடம் 144 சரக்குக் கப்பலகள் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளுக்கென துறைமுகத்தினுள் வந்து சென்றுள்ளன.

இவற்றுள் 112 கப்பல்கள் ஏற்றுமதிக்கென வந்துள்ளன டன் 32 கப்பல்கள் இத்துறை முகத்தின் ஊடகச் சரக்குளை இறக்குமதி செய்துள்ளன. பிரிமாமாவு'ஆலையின்ஊடாக அரைக்கப்பட்ட கோதுமை மாவு கோதுமைத் தவிடு என்பனவே ஏற்றுமதிப் பொருட்களாக அமைந்திருந்தன.

கோதுமைமாவு யாழ்ப்பாணம் கொழும்பு காலி துறைமுகங்களுக்கு உள்ளூர் சரக்குக் கப்பல்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இவ்வாறு 2 இலட்சத்து 20 ஆயிரத்து 793 மெட்றிக் தொன் கோதுமை மாவு கடல் வழியாக அனுப்பிவைக்கப் பட்டுள்ளது,

# பொடிச் செய்திகள்

## மகவத்தின் கௌரவ விருது

மகவத்தின் தேசிய மட்டத்திலானஅரும் கலைத்துறைக்கான'கௌரவ விருதுவழங்கும் வைபவம் எதிர்வரும் 7.ம் திகதி பிற்பகல் 3 மணியளவில் யாழ் கத்தோலிக்க திருமறை பணி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் விழாவின் அமர்வு ஒன்றில் ஒப்பனைக் கலைஞர் சாமுவேல் பெஞ்சமினுக்கு மூன்றாம் ஈராண்டுக்கான மகவம் கௌரவ விருது வழங்கப்படுவதோடு, பொற்கிளி பொன்னாடை வழங்கி கௌரவிக்கப்படுவார்.

அமர்வு இரண்டில் யாழ் பல்கலைக்கழக காத்தவராய கலைக் குழுவினரின் 'தீர்க்க சுமங்கலி' வில்லிசை இடம் பெறும்.

இவ் விழாவிற்கு யாழ் பல்கலைக்கழக தமிழ் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.இ. பாலசுந்தரம்தலைமைதாங்குவார்.

## கோப்பாயில் திருட்டு

(கோப்பாய்)

கடந்த ஒரு வாரத்தினுள் இரண்டு கடையுடைப்புச் சம்பவங்கள் கோப்பாய் பருத்தித் துறை வீதியில் நடைபெற்றுள்ளன.

கடையினுள் கூரை பிரித்து இறங்கிய திருடர்கள் பெறுமதி வாய்ந்த கன்டோஸ் பெட்டிகளையும், சிகறட் இருநூறு கொண்ட பல கட்டுக்களையும் அபகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. திட்டமிட்ட குழுவினரே இச் செய்கையிலீடு பட்டு வருவதாக பொதுமக்கள் கருதுகின்றனர்.

## இராமநாதபுரம் பாலர் பாடசாலை

(உருத்திரபுரம்)

இராமநாதபுரம் ஏழாம் யூனிற்றில் சித்திவிநாயகர் பரிபாலனசபையினதும் கிராம மக்களினதும் ஒத்துழைப்புடன் கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் உற்பத்தி. விற்பனை கூட்டுறவு சங்கத்தினால் அண்மையில் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இப்பாலர் பாடசாலையில் ஏறத்தாழ ஐம்பதுற்கு மேற்பட்டவர்கள்கற்றுவருகின்றார்கள். இப்பாடசாலை ஆசிரியருக்கான மாதச் சம்பளத்தை இச் சங்கம் வழங்கி வருகின்றது. (ப.6)

## சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் கிளைத் தேர்தல்

(சுன்னாகம்)

சுன்னாகம் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க தாவடிச்கிளைக் குழுவின் (10 ஆம்கிளை) ஒரேயொரு உறுப்பினர் தெரிவுக்கான நியமனப்பத்திரங்கள் (26.05.90 சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர்அறிவித்துள்ளார்.

## வல்வையில் மகோற்சவம்



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டி அருள்மிகு வேவில் வீரகத்தி விக்னேஸ்வரர் கொடியேற்றம் 30 ஆம் திகதி ஆரம்பமாகிய பத்து நாட்கள் இரவும் பகலும் உற்சவங்கள் நடைபெறும். வேட்டைத்திருவிழா, பூங்காவனம் தேர், தீர்த்தத்திருவிழாவு' நடைபெறும். (22)

## மன்னாரில்....

மன்னாரில் அரசாங்கக் கூட்டுத்தாபன ஊழியரின் 1990ம் ஆண்டுக்கான கணக்கெடுப்பு வேலைகள் நடைபெறுகின்றன.

இதனையொட்டி மன்னார் கச்சேரி தலைமைப்பீட உதவி அரச அதிபர் திரு.எஸ்.எம் குரூஸ் சகல கச்சேரியின் பதவி நிலை அலுவலர்கள், கிளைத்தலைவர்கள், தோட்ட உதவி ஆணையாளர்கள் அனைவருக்கும் 92/0 இலக்க சுற்று நிருபத்தை அனுப்பி 1ம் திகதி முதல் 15ம் திகதி வரை கணக்கெடுப்பு வேலைகளைச் செய்யுமாறு பணித்துள்ளார்.

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

(நாவற்குழி)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், பிரதிநிதிகள் சபைக் கூட்டமும் ஜூன் மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதிநிதிகள் சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபைக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் இறுதித்தினம் இம்மாதம் 28—ந் திகதி எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான விபரங்கள் யாவும் பொதுச் செயலாளரினால் எல்லாக் கிளைச் செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சகல அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ப.5)

## வேம்படியில் ஒன்று கூடல் நிகழ்ச்சி

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கியத்தின் ஒய்வு நாட் பாடசாலைகளின் ஒன்று கூடல் நிகழ்ச்சி அடுத்த மாதம் 7 ந் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

இந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியில் 8வயது முதல் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் கலந்து கொள்ள விருக்கிறார்கள்.

8வயது முதல் 12வயதுவரையுள்ள பிள்ளைகளுக்கும் 13 வயது முதல் 14 வயது வரையிள்ள பிள்ளைகளுக்கும் இடையில்பாடல் போட்டிகளும் 15 வயது முதல் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வேதாகமப் பொது அறிவு போட்டியும் நடைபெறவிருக்கிறது.

இதில் கலந்து கொள்ளும் ஒய்வு நாட் பாடசாலைப் பிள்ளைகள் தங்கள் விண்ணப்பங்களை இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் அருட் திரு. ஜி டி. ஆனந்தராஜன், புனித தோமஸ் ஆலயம், கம்பஸ் லேன், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்(27)

## நியமனம்

தீவுப்பகுதி தெற்கு வேலணை பதில் உதவி அரசங்க அதிபராக யாழ்ப்பணம் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை நியமிக்கப் பட்டுள்ளார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு.எஸ் பாலசிங்கம் ஓப்வு பெற்றதையடுத்து திரு. சபாபதிப்பிள்ளை இம்மாதத்திலிருந்து பதில்கடமையாற்றி வருகிறார். (33)

காங்கேசன்துறை அமைப்பாளர் அன்பரசன் பேச்சு:

# மக்களின் நம்பிக்கைக்கு விரோதமாக நடந்ததுமில்லை; நடக்கப் போவதுமில்லை

(வலிகாமம்)

''மக்களின் பலம் புலிகளின் பின்னால் இருப்பதால்தான் புலிகள் அண்மைக்காலப் போராட்டங்களில் வெற்றி பெற்றனர். மக்கள் தங்களின் காவலர்கள் புலிகளே என உறுதி கொண்டுள்ளனர். இதனாலேதான் மக்கள் சக்தி எம் பின்னால் திரண்டிருக்கின்றது. அவ்வாறான மக்களின் நம்பிக்கைக்கு விரோதமாக எப்போதும் புலிகள் நடந்ததுமில்லை, நடக்கப் போவதும் இல்லை''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் காங்கேசன்துறை அமைப்பாளர் திரு, பொ. அன்பரசன் நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற காங்கேசன்துறைப்பகுதிப் பிரத்தியேக நடனமாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது ''தமிழீழத்தில் நடைபெறுகின்ற கலை கலாசார நிகழ்ச்சிகள் அம் மக்களின் பிரச்சினையை மையமாக வைத்தே நடாத்தப்படுதல் காலத்தின் கடமையுமாகின்றது. நாம் மக்களிடமிருந்து கற்றவற்றை மீண்டும் மக்களுக்களிக்கும் கடமையைக்கொண்டிருக்கின்றோம். கலைகளும், மக்களை நெறிப்படுத்தி அவர்களது போராட்ட உணர்வுகளுக்கு ஊக்கமளிப்பதாக இருக்க வேண்டும். மாறாக கலைகள் மக்களைக் கற்பனையிலும், மாயைகளிலும் சஞ்சரிக்கச் செய்வதாயின் அது கலையுமாகாது கலாசாரத்தின் ஊடகமுமாகாது என்பதினை நாம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும்'' என்றார்.

கல்லூரி அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு இலங்கை வங்கி முகாமையாளர் திரு. நா, விவேகானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்,

நடன ஆசிரியை செல்வி சிவலலிதா அவர்களின் மாணவிகளது நடன நிகழ்ச்சிகளும், '' சாம்றாட் அசோகன்'' நாடகமும் நடைபெற்றன. (32)

## பனிப்புலம் அன்னதானமடம்

(சங்கானை)

பனிப்புலம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் முன்றலில் அன்னதான மடம் ஒன்று சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டு வருகின்றது. (13)

## இழுபறி தீர்ந்து சுமுகம் வகுப்பு ஆரம்பமாகியது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியிலும் 6.ம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதில் பெற்றோர்களுக்கும் யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் இருந்துவந்த இழுபறி கல்வி அமைச்சால் தீர்த்து வைக்கப்பட்டதை யடுத்து இவ்விருகல்லூரிகளிலும் 6 ம் ஆண்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கல்விஅமைச்சின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து புதிய யாழ் கல்விப்பணிப்பாளர் திரு.இரா.சுந்தரலிங்கம் இவ்விருகல்லூரிகளின் அதிபர்களுக்கும் பணித்த பணிப்புரைகளையடுத்தே இவ்விரு கல்லூரிகளிலும் 6-ம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான பரீட்சை பகிரங்க பரீட்சையாக நடாத்தப்பட்டு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏற்கனவே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் 6-ம் ஆண்டுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இவ்விருகல்லூரிகளிலும் 6-ம் ஆண்டு மாணவர்களை அனுமதிப்பதில் இருந்துவந்த பெற்றோர் யாழ் கல்வித் திணைக்கள இழுபறியாலே பெற்றோர்களின் நீதியான கோரிக்கைகுச் செவிசாய்த்து 6ம் ஆண்டு வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்ட கல்வி அமைச்சர், அமைச்சு அதிகாரிகள், மாகாணகல்விஅமைச்சு அதிகாரிகள், புதிய யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆகியோருக்கு வடமராட்சிப் பகுதிப் பெற்றோர்கள் ஒன்றிணைந்து நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளனர்.

## தேனீக்கள் உதயம்

சமூக சேவையில் மாணவர்கள் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பை ஊக்குவிப்பதன் மூலம் சமூக நலன்களை வளர்ப்பதற்கும் சேவைப் பாங்கை வளர்ப்பதற்கும் என கந்தர் மடம் யூனிவேர்சல் தனியார் கல்வி நிலையத்தில் ''தேனீக்கள்'' என்ற பெயரில் சமூக சேவைப்பிரிவொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இச் சமூகசேவைப் பிரிவின் தலைவராகவி,சாய்சங்கர்,உப தலைவராக ப. ரவிராஜசிங்கம், செயலாளராக சு. சாந்தகுமார், உபசெயலாளராக ப. நகுலன், பொருளாளராக வை றிஜிகாந்த் ஆகியோரும் செயற்குழு உறுப்பினராக இ. சிவபாலன், கு. ரூபாகரன், பா.சபேசன், க. மோகனதாஸ் கு.சிவச்சந்திரகுமார் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

எந்தச் சமயத்திலும் எந்த இடங்களிலும் சமூக சேவைக்குச் செல்லத் தயாராக இருக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள இது சமூகசேவைப் பிரிவுத் தேனீக்கள் ஆரம்ப நடவடிக்கையாக இரத்ததானம் செய்ய தமது குருதிவகையை இனங்காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர், பொ, ஐங்கரநேசன், ஜோசப் தியாகராஜா இலங்கராஜா ஆகிய ஆசிரியர்களின் வழிநடத்தலின் கீழ் இத் தேனீக்கள் தமது பணியை செய்வர். (34)

## நாயன்மார்கட்டில் கோழிநோய் தடுப்பூசி

கோழி நோயைத்தடுப்பதற்கானதடுப்பூசிகள் நாயன்மார் கட்டுப் பகுதியிலுள்ள நூற்றுக் கணக்கான கோழிகளுக்கு யாழ்ப்பாணம்மிருகவைத்திய அதிகாரிகளினால் போடப்பட்டுள்ளது.

இதற்கான ஒழுங்கை நாயன்மார்கட்டு பாரதி சன சமூக நிலையம் ஒழுங்கு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (33)

## சுவையான செய்திகள்

### கண்ணாடிக் கோழிகள்

கோழிகளுக்கு மூக்கு கண்ணாடி என்றால் வித்தியாசமாக; படுகின்றதா? இது சினிமா படப்பிடிப்புக்காக அல்ல. உண்மையிலேயே பூனாவில் உள்ள ஒரு கோழிப் பண்ணையில் இருக்கும் ஏராளமான கோழிக் குஞ்சுகள தங்களுக்குள் ஒன்றை ஒன்று குத்திக் குதறி அவற்றையே அவை சாப்பிடவும் ஆரம்பித்தன. ஆராய்ந்ததில் பார்வைக் கோளாறினால்தான் இப்படிச் செய்கின்றன என அறியப்பட்டது. பண்ணையில் இருக்கும் 300 கோழிக்குஞ்சுகளுக்கும் 25 பைசா அளவிற்கு மூக்குக் கண்ணாடிகளைத் தயாரித்து மாட்டி விட்டார்கள்.

### திடீர் மாப்பிள்ளை

வட இந்தியாவில் உள்ள ஔரங்காபாத்தைச் சேர்ந்த ஒரு கிராமம் இங்கு கலியாணம் செய்து கொள்வதற்காக மாப்பிளளை பஞ்சக்கச்சம் பாணியில் வேஷ்டி மற்றும் சட்டை அணிந்து குறிப்பிட்ட மணமகள் இல்லத்திற்கு வந்திருந்தார்.

மாப்பிள்ளையின் வேட்டி, சட்டையைப் பார்த்து ஏதோ அருவருப்பான உயிரினத்தைப் பார்ப்பது போலப் பார்த்த பெண் வீட்டார் எங்களுக்கு நாகரிகமான மாப்பிள்ளையே வேண்டும். இந்த வேட்டி கட்டிய நாட்டுப்புறம் வேண்டாம் என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள். திரும்பிப் புறப்பட்ட இந்த மணமகனை இன்னொரு குடும்பம் சந்தித்து தங்கள் பெண்ணை திருமணம் செய்து வைத்தார்கள்... திருமணம் இனிதேநடந்தது.

### நாய்க்காகத் தற்கொலை

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த கர்மாபெலசா ஒரு நாய்ப் பிரியன். இவனிடம் இருந்த 'மாங்ரீல்' என்ற நாயிடம் இவன் உயிரையே வைத்திருந்தான். தான் இறந்து விட்டால், தனது நாயையும் சாகடித்து தன்னுடன் புதைத்து விட வேண்டும் எனத் தன் குடும்பத்தாரிடம் கேட்டிருந்தான்.

ஆனால் இவன் சாவதற்கு முன்பு இவனது நாய் செத்துவிட்டது. இவன் சொன்ன சொல்லைத் தவறவில்லை. தற்கொலை செய்து கொண்டான். தன் உடலை நாயுடன் இணைத்து அடக்கம் செய்யும்படி இவன் ஒரு குறிப்பும் எழுதி வைத்திருந்தான்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்?

ஆசிரியர்
முரசொலி

நம்மத்தியில் உள்ள ஒருசிலர் தம்மிடம் மாத்திரம் தான் ஏதோ ரி. வி. டெக் இருக்கின்றது என்பது போல் தம் இல்லங்களில் அர்த்த ராத்திரி வேளையிலும் படம் போட்டுப் பார்க்கிறார்கள். அதுவும் தாம் மாத்திரம் ரசித்தால் போதும் என்றில்லாமல் ஒலியை மிகக்கூட்டி அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களின் நிம்மதியைக் குறிப்பாக உறக்கத்தைக் கெடுக்கிறார்கள். கௌரவம் கருதி அயல்வீட்டார் ஏன் வீண் பொல்லாப்பு என்று ஒதுங்கிக் கொள்கிறார்கள். குறிப்பிட்ட பிரகிருதிகளோ நம்மைத் தட்டிக் கேட்க எவருண்டு என்ற அறியாமை இறுமாப்பில் தொடர்ந்தும் இதே அநாகரிகச் செயலைச் செய்கின்றனர். இந்த ஜடங்கள் திருந்தும் நாள் எப்போது? அயல் வீட்டாரின் எரிச்சலைக் கொட்டிக் கொள்வதில் இவர்களுக்கு திருப்தி போலும்.

மட்டுவில் — ஷர்மிளா யசோதரன்

### ஸ்ரான்லி வீதியில் போக்குவரத்து நெரிசல்

ஆசிரியர்
முரசொலி

யாழ். ஸ்ரான்லி வீதியில் பகல் வேளைகளில் போக்குவரத்து நெரிசல் மிகக் கூடுதலாக உள்ளது. இதனால் பயணம் மிகத் தாமதமாவதுடன் விபத்துகளும்கூடச் சம்பவிக்கின்றன.

யாழ். மாநகரசபை தம் கண்காணிப்பாளரைக் கொண்டு இந்நெரிசல் நிலையைத் தவிர்க்க ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று மக்கள் கோருகின்றனர்.

ஊரெழு — திருமதி சோமசுந்தரம்

கிளிநொச்சி மாவட்டத்தில்

## வர்த்தக நிலைய ஊழியர் நலன் பேணப்படுமா?

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தனியார்வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு தற்போது அரச வர்த்தக விடுமுறை நாட்களிலும் மற்றும் சனிக்கிழமை அரைநாள் விடுமுறையும் வழங்கப்படாததால் ஊழியர்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது

விவசாய மாவட்டமான கிளிநொச்சியிலும் பிறகிராமங்களிலும் உள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கு வர்த்தகர்களினால் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கப்படுவதில்லை.

இதனால் ஊழியர்களின் சொந்த வேலைகள் பாதிக்கப்படுவதுடன் தமது வீடுகளுக்கும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்நிலைசிலமாதங்களாக வர்த்தகர்கள் செயல்படுத்தி வருவதாகவும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை கடமை நேரத்தைவிட கூடுதலாகக் கடமை செய்தாலும் மேலதிகப்படி கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவித்தனர். (35)

## 60 லட்சரூபா பெறுமதிபொருள் கொள்ளை; நால்வர் கைது

கொழும்பு நகரிலும்,களனிப் பகுதியிலும் சுமார் 60 இலட்சம் ரூபா பெறுதியான பல்வேறு பொருட்களைக் கொள்ளையடித்ததில்சம்பந்தப்பட்ட நால்வர் பொதுமக்கள் உதவியுடன் வெள்ளவத்தை பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப் பட்டவர்கள் 15 கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருபதாக விசாரணையில்தெரியவந்துள்ளது.

## சாரணர் ஆசிரியர்கள் பயிற்சிநெறி அடுத்த மாதம்

யாழ் மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால் நடாத்தப்படும் சாரணர் குருளைச் சாரணர் ஆசிரியர்களுக்கான ஆதாரப்பயிற்சி கலைக்கூறு 1க்கானபயிற்சிஅடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இதில் பங்கு கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் திரிசாரணர்கள் மற்றும் சாரணர்களை வளர்க்க விரும்பும் நலன் விரும்பிகள் எதிர்வரும் 29-ம் திகதிக்கு முன்னர் திருமதி ம. கணபதிப்பிள்ளை (உதவி மாவட்ட ஆணையாளர்), 'சரஸ்வதி வாஸா',நந்தாவில், கோவில் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## திருத்த சட்டமூலம்

1971 ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தை திருத்துவதற்கான திருத்தச் சட்ட மூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## இன்று நாள் எப்படி?

**மேடம்:** வாக்கு வசீகரம், பண வரவு, வாகன இலாபம், உயர் பதவி, புத்திர சுகம், புகழ் தேடி வரும்.

**இடபம்:** பெண்களால் பகை, பெரியோராசி, வாகன மாற்றம், எண்ணியது நடக்காது, தேடியவர் வருகை, திடீர்ப் பிரயாணம்.

**மிதுனம்:** பெரியோர் பகை, பொருள் நஷ்டம், தேடியவர் வருகை, இளைய சகோதர வழி உதவி.

**கடகம்:** இலட்சுமி கடாட்சம், புதுத் தொழில், வாகனப் பேறு, வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம்.

**சிங்கம்:** புகழ் தேடி வரும், புதுத்தொழில், வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் மூலம் இலாபம்.

**கன்னி:** வாகன சுகம், வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம், தேடியவர் வருகை.

**துலாம்:** சத்துரு பயம், திடீர்ப் பிரயாணம், தேடியவர் வருகை, புதுத்தொழில், ஆலய வழிபாடு.

**விருச்சிகம்:** வாக்கு வசீகரம், வணிகர்கள் இலாபம், எண்ணியது நடக்கும், வாகன மாற்றம்.

**தனுசு:** உயர் பதவி, உத்தமர் உறவு, காதலர் மகிழ்ச்சி, எண்ணியது நடக்கும், வாக்குப் பலிதம்.

**மகரம்:** எங்கு போனாலும், சிறப்பு, வாக்குப் பலிதம், பண வரவு, புதுத்தொழில், புகழ் தேடி வரும்.

**பம்:** வாகன சுகம், வணிகும்கள் கடற்தொழில் செய்கவார் இலாபம், உயர் பதவி, ர்ண்ணியது நடக்கும், புதுத் ஒதாழில்.

**மீனம்:** வாக்குப் பலிதம், திடீர்ப்பிரயாணம், சுகஜீவியம், இராஜமரியாதை, வணிகர்கள் இலாபம்.

**யாழ். சோதிடர்**
**ச. அரியநாயகம்**

## வானொலியில் இன்று

**வெள்ளி 25-05-90**

காலை

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | திருமுறைப் பாடல்கள்— எஸ். நாகராஜா |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச்செய்திகள் |
| | **பகல்** |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | பக்தி மஞ்சரி |
| 11.00 | நாதஸ்வரம்— திருவிழா ஜெய்சங்கர் |
| | **மாலை** |
| 6.15 | திருவாசகம்— எஸ். கணபதிப் பிள்ளை |
| 6.45 | துதிப்பாடற் பயிற்சி எம். நவரட்ணம் |
| 7.00 | களத்துமேடு— கேள்வி பதில் |
| 7.15 | விவசாய நாடகம் வயலோடு வசந்தங்கள் |
| 7.50 | உலகச்செய்திகள் |
| | **இரவு** |
| 9 30 | செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்— வித்துவான் அ. சரவணமுத்து— க. சி. குலரத்தினம் |
| 9.45 | கதாப்பிரசங்கம்— எம். வர்ணகுலசிங்கம் |
| 11.00 | ஒலிபரப்பு முடிவு |

## நேர்முகப் பரீட்சை

கிளிநொச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பயிலுநர் எழுது வினைஞர்கள் பயிலுநர் முகாமையாளர்கள் விற்பனையாளர்கள் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது.

இந் நேர்முகப் பரீட்சையை சங்க சபைத் தலைவரும் செயலாளருமான சி விக்கினராசா பொது முகாமையாளர் திரு. சி. -சிவபால சுப்பிரமணியம். சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் நடாத்தினார்கள்.

நேர்முகப்பரீட்சைக்குசுமார் ஐம்பது பேருக்குமேல் கலந்து கொண்டனர். (ப. 6)

# சகல உதவி அரசாங்க அதிபர் பணிகளும் விரிவு

சகல உதவி அரசாங்க அதிபர்களும் புனர் நிர்மாண, புனரமைப்பு, புனர்வாழ்வு, சமூக நல உதவிப் பணிப்பாளர்களாக கடமையாற்றுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த சிலவருட காலமாக நாட்டில் இடம் பெற்ற வன் செயல், இயற்கை அழிவுகள் காரணமாக ஏற்பட்ட நஷ்டங்கள் சேதங்கள் சம்பந்தமாக நஷ்டஈடு கோரிப் போலியான கோரிக்கைகள் அமைச்சருக்கு விடுவிக்கப் பட்டதையடுத்து சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் விரைவில்இத்தகைய மேலதிக பொறுப்புகள் ஒப்படைக்கப் படவிருக்கின்றன.

புனர்வாழ்வு .புனரமைப்புக் கோரிக்கைகளைச் சிறந்த முறையில் பரிசீலனை செய்யும் நோக்கமாக அமைச்சின் உதவிப் பணிப்பாளர்களாகவும் உதவி அரசாங்க அதிபர்களும் நியமிக்கப் படவிருக்கின்றார்கள் என அமைச்சு வட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் யாழ். விஜயம்

புனர்வாழ்வு அமைச்சின் அதிகாரிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தனர். திரு. சிவானந்தன், திரு. தயாபரன், உலக வங்கியின் பிரதிநிதி குனால்ட் ஆகிய மூவரே இங்கு வந்திருந்தனர்.

இவர்கள் வீடமைப்புவேலைகளை நேரில் பார்வையிட்டதுடன் யாழ் அரசாங்க அதிபருடன் பேச்சுக்களையும் நடாத்தினர். இக்குழுவினர் நாளை கொழும்பு செல்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (03)


# கேள்வி அறிவித்தல்

**பிரதேசக் கல்வித் திணைக்களம் -- நல்லூர். யாழ்ப்பாணம்**
**ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாரணத் திட்டத்தின்கீழ்**
**யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் கட்டட வேலைகள்.**

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ம் திகதி (12—06—1990) மு. ப. 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டட வேலை செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990ஆம் ஆண்டு யூன் மாதம் 08ஆம் திகதி (08—06—1990) பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பணமாக ரூபா ஐம்பதும், (ரூபா. 50/-) மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா. இருநூற்று ஐம்பதும் (ரூபா. 250/-) செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். மீளளிக்கப்படாத கேள்விப் பணம் ரூபா. ஐம்பதும் பணமாக கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்படல் வேண்டும். கேள்வி வைப்புப் பணம் வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1990-ம் ஆண்டு யூன் மாதம் 12-ம் திகதி (12—06—1990) முற்பகல் 10.30 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும், அச்சமயம் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் அது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றித் தெரிவு இரத்துச் செய்யப்படும்

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப் படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் கட்டட வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1990—05—18.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 01. யா/தொண்டமனாறு வீரகத்தி ம. வித். | பிரதான மண்டப பெருந்திருத்த வேலைகள் | 600,000.00 |
| 02. யா/உடுப்பிட்டி ஆண்கள் கல். | நீர்த்தாங்கி அமைத்தல் | 200,000.00 |
| 03. யா/உடுப்பிட்டி மகளிர் உயர்தர பா. | மாணவர் விடுதி அமைத்தல் | 1,200,000.00 |
| 04, யா/தொண்டமனாறு வீரகத்தி ம. வித். | 100'×20' மிகுதி வேலையும் சலகூடம் அமைத்தலும் | 800,000.00 |
| 05. யா/உடுப்பிட்டி ஆண்கள் கல். | உடைந்த கட்டடங்களை அகற்றுதல் | 100,000.00 |
| 06. யா/நெல்லியடி ம. ம. வித். | 90'×25' 03 மாடிக் கட்டடம் விஞ்ஞான கூடம் | 2,000,000.00 |
| 07. யா/நடேஸ்வராக் கல். | 90'×25' 02 மாடிக் கட்டடம் விஞ்ஞான கூடம் | 1,200,000.00 |
| 08. யா/நடேஸ்வராக் கல். | 50'×25' 02 மாடிக்கட்டடம் | 800,000.00 |
| 09. யா/பலாலி சித்தி விநாயகர் வித். | குழாய்க் கிணறு நீர்த்தாங்கி அமைத்தல் | 100,000.00 |
| 10. யா/உரும்பிராய் இந்துக் கல். | 120'×30' மண்டபம் | 900,000.00 |
| 11. யா/நவாலி அட்டகிரி சைவ வித். | பெருந்திருத்த வேலைகள் | 100,000.00 |
| 12. யா/இருபாலை சீ.சீ. த.க. பா. | 80'×20' கட்டடம் | 200,000.00 |
| 13. யா/மையிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி. | 68'9''×25' கட்டடமும், பெருந்திருத்த வேலைகளும் | 700,000.00 |
| 14. யாழ். கல்வித் திணைக்களம் | 130'×25' இரு மாடிக் கட்டடம் முகாமைத்துவ நிலையம் | 1,800,000.00 |
| 15. யாழ். கல்வித் திணைக்களம் | சுற்று மதில் கட்டுதல் | 200,000.00 |
| 16. தொண்டமனாறு வெளிக்கள நிலையம் | பெருந்திருத்த வேலைகள் | 250,000 00 |

05164


# ஆலய உற்சவங்கள்

அருள்மிகு திரியாய் அம்மன் வைகாசிப் பொங்கல் விழா எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகி பகல் அபிஷேகமும் அன்னதானமும் இரவு பொங்கல் திருக்குளிர்த்தியும் இடம் பெறுவதுடன் சனி அதிகாலை வழி வெட்டுதலும் நடைபெறும்.

### உசனில்

உசன்ஸ்ரீகந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 7.23 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

7ஆம்திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும், 8ஆம் திகதி காலை 6.00 மணிக்கு தீர்த்த உற்சவமும், 11 ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

### மயிலணியில்

சுன்னாகம் — மயிலணி திருக்குட வாயில் ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோவில் மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை விசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீவிஸ்வநாதப்பெருமானுக்கு தவஜாரோகணமாகித் தொடர்ந்து 10 தினங்களுக்கு மஹோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

திருவிழாக்கள் காலை 6 மணிக்கும் மாலை 4 மணிக்கும் ஆரம்பமாகும்.

### திருக்கேதீஸ்வரத்தில்

திருக்கேதீஸ்வர அருள்மிகு கௌரியம்பாள் சமேத கேதீச்சரப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9,26 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

3 ஆம் திகதி ஞாயிறு இரவு திருக்கல்யாணமும் 5 ஆம் திகதி செவ்வாய் காலைதேர்த் திருவிழாவும் 6 ஆம் திகதி புதன் காலை தீர்த்தமும் நடைபெறும்.

### காரைநகரில்

காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் 30 ஆம் திகதி புதன்கிழமை பகல் 11 மணிக்கு தவஜாரோகணம் ஆரம்பமாகும்.

5 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 6 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 7 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 8-ம் திகதி தீர்த்த உற்சவமும், 9 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

கிரிகைகள் யாவும் சிவாகம விதி முறைப்படி பிரதம குருக்கள் சிவஸ்ரீ சாம் கௌரி கணேஷக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

# இலங்கை வங்கிக் கிளையில் சனி ஞாயிறு நிவாரணம்

சனிக்கிழமைஇலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் காலை 9 மணிமுதல் பகல் 1 மணிவரை பின்வரும் கிராமசேவை பிரிவுகளுக்கான மீளக் குடியமர்த்தல் இரண்டாம் கட்ட நிவாரணம் ரூபா 1,000 வழங்கப்படவுள்ளது.

அரியாலை கிழக்கு, கோண்டாவில் கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, நல்லூர் வடக்கு கொக்குவில் மத்தி, கந்தர் மடம், கொக்குவில் கிழக்கு, கோண்டாவில் மேற்கு, கொக்குவில் மேற்கு, வண்ணார் பண்ணை வட கிழக்கு, வண்ணர் பண்ணை மேற்கு, திருநெல்வேலி கிழக்கு, அரியாலை மத்தி

மீளக்குடியமர்த்தல் நிவாரணம் ரூபா 2,000 வழங்கப்படும். கிராமசேவையாளர் பிரிவுகள் கொழும்புத் துறை. அத்தியடி, சுண்டுக்குளி குருநகர் மேற்கு, குருநகர் கிழக்கு, யாழ் பட்டினம், அரியாலை மேற்கு. கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் கிழக்கு கொக்குவில் மேற்கு

உற்பத்தித்திறன் வாய்ந்த நன்கொடைப் பணம் ரூபா 4,000 பெறும் கிராம சேவையாளர் பிரிவிகள் வண். வட மேற்கு, வண்.வட. கிழக்கு, கந்தர்மடம் நல்லூர் வடக்கு, நல்லூர் தெற்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி கிழக்கு கோண்டாவில்மேற்கு கோண்டாவில் கிழக்கு.

# மக்கள் வங்கிக் கிளையில் சனி, ஞாயிறு நிவாரணம்

தொழில் முயற்சிக்கான நன்கொடைப் பணமும் வீடு திருத்துவதற்கான நன்கொடைப் பணமும் நாளைய தினம் மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையில் வேலணைப் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அல்லைப்பிட்டி, புங்குடுதீவு, வேலணைப்பகுதிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

நாளை மறுதினம் நல்லூர், உடுவில், ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, சண்டிலிப்பாய், கந்தர்மடம், தெல்லிப்பழை, சங்கானை, சழிபுரம் கிழக்கு, வட்டுக்கோட்டை கிழக்கு பகுதிகளுக்கும்மேற்படி நிவாரணம் வழங்கப்படும்.

## வடமராட்சி வட-கிழக்குப் பகுதி

# ஒப்பந்தக்காரர் அசிரத்தை மாணவர்கள் மரநிழலின் கீழ்

வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் கட்டிடஒப்பந்தகரார்கள்அசிரத்தைக் காட்டி வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

கட்டிடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்பந்தமும் கைச்சாத்திடப் பட்டு பல மாதங்களாகியும் எந்த ஒரு வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை என பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் புகார் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் கட்டிடப் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் கொட்டுல்களிலும் மரநிழல்களிலும் இருந்து கல்வி கற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தொடர்பு கொண்டு துரித கதியில்கட்டிடங்களை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (43)

# வட-கிழக்கில் மீண்டும் விவசாய ஆராய்ச்சிகள்

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் கடந்த பல வருடங்களாகப் பாதிக்கப் பட்டிருந்த விவசாய ஆராய்ச்சிகளை மீண்டும் ஆரம்பிக்கப் படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ் ஆராய்ச்சிகள் இடம் பெறாத காரணத்தினால் வடக்குக் கிழக்குப்பகுதிகளில் விவசாயம் பெரிதும் பாதிப் படைந்து வருகின்றது. தென் பகுதியில் மேற் கொள்ளப் படும் ஆராய்ச்சிகளின் முடிவின் படியே வடக்குக் கிழக்குப்பகுதிகளில் விவசாயத்தில் புதிய முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுவருகின்றன.

இதன் காரணத்தினால் பல பூச்சி நாசினிகள் பல புதிய இனப்பயிர்கள் மற்றும் உர வகைகள் போன்றவை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு போதியளவு பயனைக்கொடுப்பதில்லை.

விவசாய ஆராய்ச்சிகள் நடாத்துவதற்கு வடக்குக் கிழகுப் பகுதிகளில் போதியளவு நிலையங்கள் உள்ள போதும் அந்நிலையங்களுக்கு நிதி ஒதுக்கப்படாத காரணத்தினாலே ஆராய்ச்சி நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருகின்றன.

விவசாய ஆராய்ச்சி நோய்களை கண்டு பிடித்து அதற்குரிய வழி வகைகளை செய்வதுடன் சந்தை வாய்ப்பையும் அதிகரிக்க உதவுகின்றது. தென் பகுதிகளில் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகள் நவீன முறையில் நடாத்தப் பட்டு வருகின்றன.

வடக்குக்கிழக்குப் பகுதிகளில் விவசாய உற்பத்திகள் குறைவடைந்ததற்கு மேற்படி காரணமே தெரிவிக்கப்படுகின்றது. (03)

# யாழ் மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்ட மாணவர் அவலம்

யாழ் மாவட்டத்திற்குகல்வி கற்பதற்காக இடம்பெயர்ந்து வந்துள்ள வெளி மாவட்ட மாணவர்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருவதாகத் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வீடுகளிலே இவர்கள் வாடகைக்கு அமர்ந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் உணவுடன் 850 ரூபாவரைவாடகைமாணவர்களுக்கு அறவிடப்படுகின்றது.

வாடகை அறவிடப்பட்ட போதும் இம் மாணவர்களுக்கு பல கட்டுப்பாடுகள் விதிக்கப் பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. மின்சார விளக்கு இரவில் அதிக நேரம் பாவிக்கக் கூடாது, குளிப்பதில் கட்டுப்பாடு போன்ற பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன,

அத்துடன் வீட்டுச்சொந்தக் காரர்கள் தமதுவிருப்படி ஒரு அறையில் அதிக மாணவர்களை அனுமதிப்பதால் கல்வி கற்பதற்கு இடைஞ்சலாக இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்காகவே வெளிமாவட்ட மாணவர்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுத்துள்ளார்கள். (03)

# வேலணை-அராலி கடற்பாதை புதிதாக அமைக்க நிதி ஒதுக்கீடு

வேலணை-அராலி கடற்தாம் போதி வீதியை புதிதாகப் போடுவதற்கென 21 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்டநிதி யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (19)

## 1988-ல் நிதி...

நடவடிக்கைகள்கடந்த ஆண்டு பிற்பகுதியில் ஆரம்பிக்கப் பட்டு ஒரு பகுதிக்கு மட்டும் தூண்கள் நிறுத்தி கம்பி இழுக்கும் வேலை நடைபெற்றது: மீண்டும் இம்மாத முற்பகுதியில் (10) பத்து வரையிலான மின்தூண்கள்மட்டும் நாட்டப் பட்டுள்ளன. மிகுதியான எந்தவொரு வேலைகளும் நடைபெற வில்லை. (18)

## மத்திய...

மண்டபத்தில் கல்வி அமைச்சின் புதிய செயலாளருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இ.த.ஆ. சங்க மட். கிளைத் தலைவர் திரு. வி. த குமாரசாமிதலைமையில்நடைபெற்ற வைபவத்தில் திரு. சற்குணராசா தொடர்ந்து உரைநிகழ்த்துகையில்;

வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரங்களை நான் மட்டும் வைத்திருக்க விரும்பவில்லை. அதிகாரங்களைபரவலாக்குவதுதான்ஒரு முகாமையாளரின் சிறப்பு. இதன் அடிப்படையில் மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப் பட்டிருக்கிறது. என்றார்.

இவ் வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. சோமசுந்தரம், திருமலை மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. எஸ். தியாகராசா ஆகியோர் உரையாற்றினர். (5)

## இ.போ.ச..

வடிக்கைகளில் அரசாங்கம் தலையிடமாட்டாது எனவும் அமைச்சர் விஜேபாலமென்டிஸ் குறிப்பிட்டார்.

## விவசாயிகள்...

வுக்கே விற்றுவருகின்றார்கள் நெல் சந்தைப்படுத்தும் சபையின் முள்ளியவளை, மாங்குளம் களஞ்சியங்களில் ஒரு புசல் நெல் 146 ரூபா 30 சதத்திற்கு கொள்வனவு செய்யப்படுகின்றது.

இதனால் விவசாயிகள் 36 ரூபா 30 சதத்தை மேலதிகமாகப் பெறமுடியுமென வட பிராந்திய நெற் சந்தைப்படுத்தும் சபையினர் தெரிவிக்கின்றனர். (ப. 8)

## பெற்றோரை...

தப்படவுள்ளது.

18 வயதிற்கு உட்பட்ட தாய் தந்தையரை இழந்த மேற்படி பிள்ளைகளே இத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களும் தங்கள் பாடசாலைகளில் மேற்படி திட்டத்தில் அடங்கும் பிள்ளைகளின் விபரங்களை உடனடியாக யாழ் கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமான சுற்று நிருபம் யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரினால் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (43)

## முன்னாள்—

நாளை மட்டக்களப்பு ஆலையடிச்சேவை மாயனத்தில் நடைபெறும், (05)

## அமைச்சர்...

குறிப்பிட்டார்.

சபைக்கு வந்தால் அமைச்சர் சபைக்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் என சபாநாயகர் குறிப்பிட்டபோது பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்மேசையில் தட்டி ஆரவாரம் செய்து சாபாநாயகரின் கூற்றை வரவேற்றனர்.

## புலிகளுடன்...

துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அமைச்சர் ஜனாப் ஹமீத் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார் என்றார்.

ஈ. பி. ஆர். எல், எப். புக்கு அரசு ஆயுதபயிற்சி அளிக்கிறது என்று வெளிவந்த செய்திகளை அமைச்சர் நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் மறுத்தார்,

மலைய மக்களை வடக்கு கிழக்கில் குடியேற்ற விடுதலைப்புலிகள் விடுத்தஅழைப்பு குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மலையக தமிழரை குடியேற்றுவது தொடர்பான முடிவுகளை அரசுதான் எடுக்கமுடியும் வேறு எவரும் எடுக்க முடியாது எனத் தெரிவித்தார்,

ஜனாதிபதி விடுதலைப்புலிகள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளார் விடுதலைப் புலிகளும் ஜனாதிபதி மீது நம்பிக்கை கொண்டுள்ளனர் எனவே அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுக்கள் சுமுகமான முடிவுகளைத் தரும். புலிகளை எதிர்க்கும் நோக்கம் அரசுக்கு இல்லை எனவும் அமைச்சர் ரஞ்சன் குறிப்பிட்டார்.

## படைப்பாளிகளின்...

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாமென்றும் அறிவித்துள்ளனர்.

பிரசுரத்திற்கு ஏற்கப்படாத பிரதிகளை திரும்ப நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்றும் அதன் பொறுப்பாளர் தெரிவித்தார்

## விலை குறையும்

சீனியின் விலை இன்று முதல் ஒரு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் சீனியை தற்போது இறக்குமதி செய்ததையடுத்தே மேற்படி விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது

# காலமானார்

## இராஜரட்ணம் அம்பலவாணர்

(முன்னாள் மட்டக்களப்பு மேயர்)

முன்னாள் மட்டக்களப்பு மேயர் இராஜரட்ணம் அம்பலவாணர் காலமாகி விட்டார்.

அன்னார் ஆனந்தலட்சுமியின் அன்புக்கணவரும் லவக்குமார்(கனடா), உதயகுமார்(இலங்கை சட்டக்கல்லூரி) ஜோகக்குமார், சிவகுமார்,. விஜயகுமார், அரவிந்தகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரி பத்மநாதன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் யாழ்ப்பாணம் ஆனைப் பந்தியடியைச் சேர்ந்த காலஞ் சென்ற S. R. தளையசிங்கம் இரத்தினம்மா அவர்களின் அன்பு மருமகனும் அருணகிரிநாதன்(சிரேஷ்டதொழில்உதவி ஆணையாளர்) காலஞ்சென்ற யோகநாதன் (வழக்கறிஞர்) சண்முகநாதன், இராமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இல. 21 ஈஸ்வரன் ஒழுங்கை மட்டக்களப்பு இல்லத்திலிருந்து நாளைசனிக்கிழமை (26ம் திகதி) பிற்பகல் 3 மணிக்கு இறுதிக் கிரியைகளுக்காக ஆலையடிச்சோலை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

த. சண்முகநாதன்
71, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

05169

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிரைவேட்]லிமிற்றெட், சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ம இலக்கத்திலுள்ள அச்சகப்]பிரிவில் 25-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது